முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 984

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.06.2022**, வியாழக்கிழமை

1. ஆறுமுகராஜனே அரங்கா வாழ்க
   அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
   மாறுதலை உலகோர்க்கு தருவேன் என
   மாதவசியாய் வந்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வரமென ஞான அறிவுரை ஆசி தன்னை
   தாழ்விலா அரங்கனுக்கு எடுத்துரைப்பேன்
   (சுபகிருது வருடம் வைகாசி மாதம் 26 ம் நாள், 09.06.2022 வியாழக்கிழமை)
   தவசி அரங்கன் வழிகள் உயர் வழி
3. உயர் வழியை உலகோர் பின்பற்றினால்
   உலகை மாற்றி எங்கும் பாதுகாப்பு தந்தருளக்கூடும்
   கூடவே அரங்கன் திருவடி பற்றி குருமார்க்கமெனும் சன்மார்க்க வழியை
   நாடெங்கிலும் உலகோர் கொண்டு சென்றால் ஞானபூமி ஆவது உறுதிஉறுதி
4. உறுதிகொண்டு அரங்கனே கலியை மாற்ற
   உயர்வான என் அவதாரமாக வந்திருக்க
   கருதி உலக மக்கள் தொடர்ந்து
   கருணைநிறைந்த அரங்கன் குடிலில் நிரம்ப
5. நிரம்பவே உலகோர்க்கு நல்ல வரங்களும்
   நிலைத்தன்மை கொண்ட மகா சூட்சுமங்களும்
   ஆறுமுகன் என் அருளாலே கிட்டி
   அகிலத்தார் அரங்கன் வழி ஞானியாக நேரும்
6. நேர்மைபட இந்த சத்திய வழிகளை
   நிலவுலகோர் ஏற்றால் போதும்
   வருமுலகில் உலகில் எந்த அழிவுகளும்
   வதை செய்யா பேருலகம் பாதுகாப்பு மிக்க
7. காப்புமிக்க ஞான பூமியாக மாறி வையகம் எதன் வழியும் அழிவு அனுகாத
   உயர் பூமியாக ஞான பூமியாக அரங்கன் ஞானப் படைகள் நிர்வகிக்கின்ற
   ஆற்றல் மிக்க ஞான ஆட்சிக்காலமாகவும் மாறி
   மாறியே உலகம் பாதுகாப்புப் பெறும் மக்களெல்லாம் அமைதி மகிழ்வு காண நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–